2014 ஜுலை 23]

238—

தரம் உயர்த்துதல்

***29281—திரு. கார்த்திக் தொண்டைமான்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, வடவாளம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் கூறியுள்ள புதுக்கோட்டை மாவட்டம், வடவாளம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது தொடர்பான செயற்குறிப்பு பெறப்பட்டு, தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.*

திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லப் டப் என்று துடித்துக் கொண்டிருந்த இதயத்தை லாப்டாப் என்று துடிக்க வைத்த (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருவடிகளுக்கு எனது பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

ஈரம் நிறைந்த மனம், ஈகை நிறைந்த குணம், வெற்றிகள் குவிந்த கரம், பள்ளிப் பிள்ளைகளின் பாதுகாவலராகத் திகழ்ந்து, எனது கோரிக்கையினை ஏற்று, பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், அன்பே உருவான மாண்புமிகு

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 239, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

239—

ஆரம்ப சுகாதார நிலையம்

*4585—**திருமதி ஆர். சாந்தி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, காவகாரன்பட்டி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) காவகாரப்பட்டி கிராமம் என்பது எருமப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. இந்த ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மக்கள்தொகை சுமார் 1,02,793 ஆகும். காவகாரன்பட்டி கிராமத்தில் உள்ள மக்கள்தொகை சுமார் 1,510. எருமப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் மக்கள்தொகைக்கேற்ப அங்கு ஏற்கெனவே செயல்பட்டுவருகின்ற 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமான அளவில் உள்ள காரணத்தினால் காவகாரன்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.